விசேஷ
விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ
விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ௵ புரட்டாதி மீ கஎ உ (1941 அக்டோபர் 2 வியாழக்கிழமை) [இலக்கம் சஎ]


## சிவஞானபோதம்

கூ-ஆம் சூத்திரம்

[தருமபுர ஆதீனம்: மெய்கண்டான் சித்தாந்தமகாநாட்டிற் படிக்கும் வண்ணம், யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய கட்டுரை. (28-8-41) ]

வேதத்தி னரும்பொருளை விமலனரு ணந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபா
லோதிதேர்க் தருந்தமிழா லெமக்குணர்த்தி யெம்மனஞ்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்.

### முன்னுரை

சிவஞான போதமென்னும் திவ்விய சித்தாந்த நூல் வடமொழியில் உள்ளது. அது இரௌரவாகமத்தின் ஓர் பகுதியாகும். அதனைத் தமிழகத்தோர் உய்யும் பொருட்டு, அவதரித்தருளிய ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனர் தமிழில் மொழி பெயர்த்துச், சூத்திரத்துக்குக் கருத்துரையும் மேற்கோள் எது திருட்டாந்தங்களும் அருளிச் செய்தார். அது சிவஞானபோதத்து முதல் இறுதிச் சிறப்புப் பாயிரங்களானும், உமாபதி சிவாசாரியர், சதாசிவ சிவாசாரியர், அப்பைய தீக்ஷிதர், தத்துவப்பிரகாச சுவாமிகள், சிவாக்கிர யோகிகள், ஞானப்பிரகாசர் முதலிய சிவாநுபூதிச் செல்வர்கள் அருளிய திருவாக்குக்களானும் உணரப்படும்.

இச் சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. அவற்றுள் முதலாறு சூத்திரங்கள் திரிபதார்த்தங்களின் பொது இலக்கணங் கூறுதலின் பொது அதிகாரம் எனப்படும். பின்னுறு சூத்திரங்கள் திரிபதார்த்தங்களின் சிறப்பிலக்கணம் கூறுதலின், (உண்மை) சிறப்பதிகாரம் எனப்படும். பொது அதிகாரத்தின் முதல் மூன்று சூத்திரங்கள் திரிபதார்த்தங்களின் உண்மைக்கு பிரமாணங் கூறுதலின் பிரமாண இயல் எனவும், பின் மூன்று சூத்திரங்கள் அவற்றின் இலக்கணங் கூறுதலின் இலக்கண இயல் எனவும் கூறப்படும். சிறப்பதிகாரத்துள் முன் மூன்று சூத்திரம் அதிகாரியும் சாதனமும் அது வருவாயும், சாதிக்கும் முறையும் கூறுதலின் சாதன இயல் எனவும், பின் மூன்று சூத்திரம் பாசக்ஷயம் சிவப்பேறு சீவன்முத்த ரியல்பு கூறுதலின் பயனியல் எனவும் பெயர்பெறும்.

சாதன இயலின் மூன்றும் பாதமாகிய ஒன்பதாம் சூத்திரம் முத்திக்குச் சாதனமாகிய பதிஞானம் அநுட்டிக்கும் முறை கூறுகின்றது. இது மூன்று அதிகரணங்களையுடையது. அவற்றுள் முதலதிகரணம் பசுஞானத்தினுல் இறைவனை அடைதல் கூடுமென்பேரரை மறுத்து அதனுல் அறிய முடியாது; பதிஞானத்தினுல் அறியவேண்டும் எனக் கூறும். இரண்டாமதிகரணம் பதிஞானத்தை அடைதற்கு உபாயம் பிரபஞ்சத்தை அசத்தென அகன்று கழித்தலே எனச் சாதிக்கும். மூன்றுமதிகரணம் பதிஞானத்தைப் பெற்று அதனுல் ஞேயத்தைக் கண்டவிடத்தும் பழைய வாசனை தாக்காதிருக்கும் பொருட்டு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபிக்கவேண்டுமெனச் சாதிக்கும்.

### கூ-ஆம் சூத்திரம்

எட்டாஞ் சூத்திரத்தில் சாதன அறிவு ஆசாரியனுல் வருமெனக்கூறி அச் சாதனத்தை அநுட்டிக்குமுறை இங்கே கூறப்படுகிறது.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத் துனைத் தேர்த்தெனப் பாச
மொருவத்
தண்ணிழ லாம்பதிவிதி யெண்ணு
மஞ் செழுத்தே.

இது ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனர் திருவாய் மலர்ந்தருளிய தென் மொழிச் சிவஞானபோதத்து ஒன்பதாஞ் சூத்திரமாம்.

இச்சூத்திரம் ஆன்மசுத்தி பண்ணுமாறு கூறுகின்றது. அஃதாவது எட்டாஞ் சூத்திரத்துட் கூறியபடி, சிவபெருமான் ஆசாரிய மூர்த்தியாய் வந்து உபதேசிக்கக் கேட்ட ஆன்மா அவ்வுபதேசத்தைச் சிந்தித்தலினுல் ஐம்புலமாகிய வேடரோடு கூடி வளர்ந்த அசுத்தத்தை நீக்கித் தன்னைச் சுத்தி செய்யுமாறு கூறுதலாம்.

முற்சூத்திரத்தின் ஆசாரியனுல் ஞானம் நிகழுமெனக் கேட்டல்கூறி இச் சூத்திரத்தின்கண் அந்த ஞானத்தைச் சிந்திக்கும் முறை கூறுகின்றமையினுலே சூத்திர சம்பந்தம் விளங்குகின்றது.

சிவப்பிரகாசத்து எட்டாஞ் சூத்திரத்திலே 'தேசுற' என்ற செய்யுளிலே 'தான்பணியைப்பேதத்தல் ஆன்மசுத்தி' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆன்மசுத்தியாகிய தான்பணி நீத்தலை இச் சிவஞானபோதத்துப் பத்தாஞ்சூத்திரம 'இறைபணிநிற்க' என்று கூறுகின்றது. அங்ஙனம் இறைபணிநிற்பின் பாசக்ஷயம் உளதாம். அதுவே ஆன்மாவுக்குச் சுத்தியாம். அங்ஙனமாகவும் பத்தாஞ் சூத்திரத்திற் கூறவேண்டிய ஆன்மசுத்தியை இச்சூத்திரத்திற் கூறலாமோவென ஆக்ஷேபம் நிகழின் இந்த ஒன்பதாம் சூத்திரம 'பதியை ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி' எனவும், 'தண்ணிழலாம் பதி' எனவும் சிவதரிசனம் பண்ணுமாறு கூறுகின்றது. சிவதரிசனத்தில் நிகழ்வது ஆன்மசுத்தியாதல் பற்றியும், இவ்விரண்டுஞ் சிறப்பான்மை வேறுபாடுடைமைபற்றியும் ஒன்பதாம் பத்தாஞ் சூத்திரங்கள் ஒரு பொருள் மேலனவாய் நிற்றலின விரோதமாகாது என்பதாம்.

ஆன்மாத் தன்னை ஐம்புலன்களின் வேருகக் காணவே சிவபெருமானுடைய ஸ்ரீ பாதத்தை அடையும் அந்தக் காட்சியே அமையும்; சுத்தி எதன் பொருட்டோ என ஆக்ஷேபம் நிகழின் அதற்குச் சமாதானம்; காட்சியாவது நிர்விகற்பமாய்க் காண்டலும் அதுவோ இதுவோ எனச் சந்தேகமாய்க் காண்டலும் தெளியக்காண்டலுமென மூவகைப்படும். இந்திரியங்களின் வேருகத் தன்னைக் காணுமுறையில் இம் மூன்று வகைக் காட்சிகளும் அதிபரிபக்குவமுடையவர்களுக்கு ஆசிரியருடைய உபதேசத்தைச் சிரவணஞ் செய்த மாத்திரத்திற்றனே ஒருங்கே நிகழும். அதாவது விரைவாய் மூன்று காட்சியும் ஒன்றன் பின் ஒன்றாய் நிகழுவதாம். ஏனையவர்கட்கு உபதேசத்தைக் கேட்டல் செய்த மாத்திரத்தே நிகழாவாம். அவருக்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் எனுமும் மூன்றும் வடிமுறையானே நிகழுதலின் சிவரூபத்தில் நிகழும் ஆன்ம தரிசனத்துக்குப் பின் சிவ தரிசனத்தில் நிகழும் ஆன்மசுத்தி கூறப்படுவதாம்.

இக்கருத்துப் பற்றியன்றே வழிநூலாசிரியர் ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் 'பாசிபடு குட்டம்' என்ற செய்யுளில்,

தேசமொடு திருவடிக்கீழ்
நீங்காதே தூங்கு
நினைவுடையோர் நின்றிடுவர்
நிலையதுவே யாகி

## காகிதத்தின் கூடுதலான விலைகள்

### ஆடம்பர உபயோகங்கட்கு விதிவிலக்கு

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி மிஸ்டர் ஆர். எஸ். வி. பவுலியர் இந்நாட்டிற் காகிதங்களை விற்பனை செய்யவேண்டிய ஆகக் கூடுதலான விலைகளை நிர்ணயித்துச் சென்றவெள்ளிக்கிழமை ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவு விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூன்றுவது பிரிவின்கீழ் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உத்தரவு ஆடம்பர உபயோகங்களுக்கான ரகங்களைப் பாதிக்கமாட்டாது. இந்த ரகங்களுக்கு அதிக கிராக்கி இல்லாமையால் இவற்றின் விலைகள் நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை யென்று கருதப்படுகிறது.

இத்திட்டம் மூன்று தினங்களில் தயாரிக்கப்பட்டு நடைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஏனைய காகிதங்களின் கூடுதலான விலை ருத்தல் 1க்குப் பின் வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:-

பளபளப்பில்லாத (கிளேஸ் அல்லாத) பத்திரிகைக் காகிதம் 37 சதம் பளபளப்பான (கிளேஸ்) காகிதம் 42 சதம் பளபளப்பான (க்ளேஸ்) வெள்ளைவுட்பிரீ காகிதம் 60 சதம் உயர்ந்த 'காலண்டர்' காகிதம் 60 சதம் பளபளப்புள்ள (கிளேஸ் டின்டெட் காகிதம் 58 சதம் வட்பிரீ 'பாங்பேப்பர்' 55 சதம் வுட்பிரீ 'கிரீமலேயிட்' புல்ஸ்காப் 55 சதம் ரிப்டீசாப்ட் பேப்பர் 70 சதம்.

---

ஆசையொடு மங்கு மிங்கு
மாகியல மருவோ
ராரும்பாச மறுக்கும்வகை
யருளின்வழி யுரைப்பாம்

சிவபெருமானிடத்து நீங்காத அன்புடையவர் அச்சிவமேயாய் நிற்பர். பழைய வாசனையினுற் சிவனிடத்துக் கருவிகளினிடத்தும் நிலைபெறுமல் அலைபவருக்கு அவ் வாசனையை நீக்கும் உபாயத்தை ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறுவாம் என்று கூறியருளினர்.

இனி, ஆன்மசுத்தியாவது சூரியனுடைய கிரணத்தைப் பொருந்தின கண்கள் சூரியனுகாதவாறு போலத் திருவருளைச் சேர்ந்த ஆன்மா அத்திருவருள் செய்யும் பஞ்ச கிருத்தியத்தைத்தான் செய்ய வேண்டுமெனல் கூடாதென உணர்ந்து தற்போத நிகழ்ச்சியின்றித் திருவருளின் அழுந்தி துசேர்தலாம். இது ஞானத்துக் கிரியை; சிந்தித்தல் ஞானமுமாம்.

சிவதரிசனமாவது திருவருள் செய்யுங் கிருத்தியத்தை ஆன்மாச் செய்யாதென்று திடபுத்திகொண்டு நிற்றலாம்.

இனி, இவ் வொன்பதாஞ் சூத்திரத்தில் 'ஊராத்துனை தேர்த்தெனப் பாச மொருவ' என்றும் இச் சூத்திரம் இரண்டாமதிகரணத்தில 'அசத்தாயுள்ள வண்ணபேதங்களை அசத்தென்று காணவுளதாய் நிற்பது ஞான சொரூபம்' என்றும் கூறியிருத்தலினுலே தத்துவ சுத்தியுங் கூறப்பட்டதென ஆக்ஷேபிக்கின்; அதுவும் பொருந்தாது; உண்மை நெறி விளக்கம் என்னும் சித்தாந்த சாஸ்திரத்தின் கண்ணே.

'கண்ணுதலருளால் நீக்கல் சுத்தியாக் கருதலாமே' எனத் தத்துவ (தொடர்ச்சி 4-ம் பக்கம்


(தொடர்ச்சி 4-ம் பக்கம்


## வாணிக உலகு

S. V. Ram, B .A., FMC
முற்றொடர்

2. இவ்விருவகை ஸ்தாபனங்களின் நடப்புத் தொழில் ஒன்றேயாகிலும் அவைகளின் நிர்வாகத்தில் வித்தியாசமுண்டு.

3. பங்குகளைச் சேர்த்து ஸ்தாபிக்கப்படுவது கூட்டுப் பங்குக் கழகமாகும். அவைகளில் சில பங்காளிகளின் பொறுப்பை வரை இட்டு விடுகின்றன.

வரையிடப்படாத கழகத்தின் வருமதி முழுவதும் செலவாக வேண்டிய கடன்களுக்குச் சம்பந்தப் பட்டவையாகும்.

4. முன் கூறப்பட்டுள்ள இருவகை ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலுள்ள வித்தியாசம் (1) சொந்தப் பொறுப்பில் நடத்தப்படும் நிதியின் நிர்வாகம் பங்காளர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. கூட்டுப் பங்கு பழக்கமாகில் நிர்வாகசபையோரால் நிர்ணயிக்கப்படுகிறது.

(2) கூட்டுப் பங்குக் கழகங்கள் வருடந்தோறும் கணக்குகளை முடித்துத் தயாரிக்கும் "ஐந்தொகை"க் குறிப்பைப் பங்குதாரர்களுக்கு அனுப்பித்துக் கொள்ள வேண்டியது முறை. (3) சொந்தநிதியினால் சம்பாதிக்கப்படும் வருமானம் முழுவதும் பங்குக்காரர்களுக்கு உரித்


(தொடர்ச்சி 4-ம் பக்கம்)


## ஒப்பந்தத்தைப் பூரணமாகத் திருத்த வேண்டும்

பம்பாய், செப் 24—

"பர்மாவில் இந்தியர் குடியேறுவது சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தைப் பூரணமாகத் திருத்தி அமைத்தாலன்றி இந்தியாவில் இப்போது ஏற்பட்டுள்ள அதிருப்தி குறையாது. பர்மாவிலுள்ள இந்தியர்களின் குறையும் நீங்காது."

என்று பர்மா இந்தியர் அதுக்கோஷ்டியினர் இந்திய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றுமாலை கனம் வாஜ்பேயரை இந்தத் அதுக்கோஷ்டியினர் சந்தித்தனர். மகஜரில் கண்டுள்ள விஷயங்களைப்பற்றி அவருடன் கலந்து ஆலோசித்தனர். ஒப்பந்த நிபந்தனைகள் பூரணமாகத் தெரிந்திருந்தால் அட்ஹாக் கமிட்டி அங்கத்தினர்கள் சற்றும் தயங்காமல் இந்த ஒப்பந்தத்துக்கு இணங்க வேண்டாமென அப்போதே யோசனை சொல்லியிருப்பார்கள் எனத் தெரிகிறது. பர்மியரின் நல்லெண்ணத்தைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருப்பதால் இப்போது அங்கும் இங்குமுள்ள இந்தியரின் நல்லெண்ணத்தைப் பெறக்கூடியபடி திருத்தங்கள் செய்யவேண்டியது அவசியமென்று அதுக்கோஷ்டியினர் எடுத்துச் சொன்னர்கள். ஒப்பந்தத்திலுள்ள குறைகளையும் இவர்கள் மகஜரில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.

## தமிழில்கலைச்சொற்கள்

நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்:—

மாணக்கர்கட்கு அறிவு நூல்களை நாட்டுமொழி வாயிலாகக் கற்பிக்கும் பொருட்டு அரசியலார் கலைச்சொற்களைத் தொகுக்கவிரும்பியது பொதுவகைப் பாராட்டற்குரியதே. ஆனால் அவ்விருப்பம் பயன்தரத்தக்க முறையில் முயற்சி கைபெறவில்லை. தென்னிந்திய மொழிகளில் கலைச்சொல் லாக்குதற்பொருட்டு 1923-ம ஆண்டில் சென்னை அரசாங்கத்தினர் நியமித்த கழகத்தின் வேலை பயனற்றதாய் ஒழிந்ததன் காரணத்தை ஆராய்ந்து அக்குறை மீட்டும் நேர்தற்கிடமில்லாதபடி சென்ற ஆண்டிலே சென்னை அரசாங்கத்தார் கலைச்சொல் வெளியீட்டு ஆலோசனைக் குழுவை அமைத்திருத்தல் வேண்டும. சென்னைக் குழுவினர் கண்ட முடிபுகளும் எவ்வாற்றுனும் பயன்றரத் தக்கனவல்ல. பல தேய ஒருமைப்பாட்டின் பொருட்டுப் பொது மொழி ஒன்றிருக்கக்கூடுமாயின் நன்றே. ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களை அப்படியே இந்தியநாட்டு மொழிகளில் எடுத்துக் கொள்வது பல தேய ஒருமைப்பாட்டின் பொருட்டுப் பொதுமொழி ஒன்றிருக்கக்கூடுமாயின் நன்றே. ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களை அப்படியே இந்திய நாட்டு மொழிகளில் எடுத்துக் கொள்வது பல தேய ஒருமையை ஏற்படுத்துவதாகாது. அம்மொழியின் சொல்லோசையை அவ்வாறே பிறமொழிகளில் அமைத்தல் இயலாதன்று. அமைப்பினும் அவ்வோசையையுடைய பிறமொழிச் சொல்லோடு வேற்றுமை யறியாது மயங்குதற்கிடனுகும். Air என்னும் சொல்லைத் தமிழில் ஏர் என்று எழுதினுல் எவ்வளவு குழப்பமுண்டாகும்? அன்றியும் ஒரு மொழியிலுள்ள கலைநூலை அம்மொழி கற்றாரன்றி ஏனையோர் அறிதல் இயலாது. அவ்வாறிருக்கப் பல மொழிகளிலும் கலைச்சொற்களை மட்டில பொதுவாக்குதலால் விளையும் பயன் யாது? தென்னிந்திய மொழி அல்லது திராவிட மொழிகளில கலைச் சொற்களை வடமொழியிலிருந்து அமைப்பது என்பதும் முறையற்ற செய்கை. திசைபற்றி வடமொழிக்கு எதிராகத் தென்மொழி என்று கூறப்படுவதும்' எவ்வகையிலும் வடமொழிக்குத் தாழ்ந்த தல்லாததும், கலைகட்கு வேண்டிய சொற்களை யெல்லாம் தன்னகத்துக் கொண்டிருப்பதும், தாவல்லதும், ஆகிய தமிழுக்கு வடமொழியிலிருந்து சொற்களை என் கடன் வாங்குதல் வேண்டும்? மற்றும் இவ் விரு கொள்கையும் நாட்டு மொழி வாயிலாகக் கல்வி கற்பிப்பது என்னுங் கொள்கைக்கு முரணனவை. மொழிப் பயிற்சியை அன்றிக் கலைப்பயிற்சியையுங் குறைக்கக் கூடியவை. சிறப்பாகத் தமிழுக்கு ஊறு செய்வன, தமிழ் மக்கள் எதனை இழந்தாலும் தங்கள் மொழியின் தூய்மையை இழக்க ஒருப்படார். ஆகலின் அவர்கள் கருத்துக்கு மாறுக வலிந்திற் புகுத்தப்படும் இம்முறையால் எத்துணையும் பயன் விளையாது.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம், 1934-ம் ஆண்டில் இவ்வேலையை மேற்கொண்டு பல்கலைகளிலும் தமிழிலும் பயிற்சியுடையவர்களின் உதவியால், வெவ்வேறு கலைகட்குரிய சொற்களைத் தமிழில் எழுதி, 1936-ம் ஆண்டில் ஓர் பெரிய மகாநாட்டையுங் கூட்டி, அறிஞர் பலருடைய ஒப்புதல் பெற்று, "கலைச்சொற்கள்" எனனும் பெயரால் ஓர் புத்தகவுருவில் வெளிப்படுத்திற்று. எல்லாக் கல்வி நிலையங்களும், வெளியீடுகளும் அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி செய்யச் சென்னை அரசியலாரை முன் வந்தனர். நூல் எழுதுவோரும், கற்பிக்கும் ஆசிரியரும், முதலாக அனைவரும் அவற்றை மேற்கொண்டமையால் அவை பெரிதும் வழக்காறற்ற நிலையை அடைந்துள்ளன. தமிழைப் பொறுத்த மட்டிலாவது அவற்றையே ஏற்றுக் கொள்ளும்படி செய்வதும், அவை போதாவிடத்து அம்முறையைப் பின்பற்றி மேலும் சொற்கள் ஆக்குமாறு செய்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

—செந்தமிழ்ச் செல்வி

## பத்தினிக் கடவுளும் பாண்டிய மன்னனும்

'ஒளி'

முடிகெழு வேந்தர் மூவர் அரசுபுரிந்த நாடு அருந்தமிழ் நாடாகும். இத் தமிழ் நாட்டைத் தம் அரசுநிலை தவறாது முரசு முழங்கப் பேரரசு கட்டிலில் இறங்க வீற்றிருந்து நல்லாசியற்றிய பலர் தம் பிழைகண்ட விடத்து தமோமுளதாய், வருந்தி, தம்பிழைக்குத் தாமே சாவதெனத்தக்க தண்டனையை யேற்பர். பிறர் குற்றங் கண்டவிடத்துப் பிழையற ஒறுக்கும் பெற்றிமை கொண்ட அரசர், தம்குறை கண்ட விடத்தும் தளர்ந்து அதற்குரிய தண்டனை அடைவர். இவ்வாறு அடைத்துள்ள அரசர்பலர் அருந்தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் தலைசிறந்து விளங்கியவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

கருங்கடற்றிரைகள் கணக்கிலாதனவாய் வந்துமோதும் வளமிகுந்த சோழர் தலைநகராய் விளங்கியது, புகார் எனப்படும் காவிரிப்பூம் பட்டினம். இக்காவிரிப்பூம் பட்டினத்தே மாசாத்துவானுக்கு மகனுய்த் தோன்றிக் கண்ணகியென்னும் கன்னிகையை மணந்த கோவலன் ஊழ்வினை வசத்தால் மாதவியென்னும் தாசியை அடுத்து அவள் மையலில் ஈடுபட்டிருந்தான். கடற்கரைப் பாட்டால் கருத்து வேறுபட்ட கோவலன், மட்டிலாப் பொருளை வாரி வழங்கிய பிறகு அம்மாதவியை விட்டு நீங்கிக் கண்ணகியிடம் சென்று கலங்கினுன். மேலும் பொன்பெற வழியில்லை எனக் கருதினனாகிய கண்ணகி தன் காற்சிலம்பளிக்கக் கருதினுள். ஆனல், கோவலன் தன் உள்ளக் கருத்தை உணர்த்தி, இல்லக்கிழத்தியாகிய கண்ணகியையும் உடன் அழைத்து மதுரைமாநகர் நோக்கி நடக்கலாயினன். "பேயும் உறங்கும் பேரிருள் யாமம்" என்பதையும் கருதாது கடுவழிச்சென்ற அத்தலைவனும் தலைவியும், வழியிடைக் கவுந்தி அடிகளை உடன் துணை கொண்டனர்.

நெடுநாள் சென்று தென்னவன் உறையும் கூடல் நண்ணினர். மதுராமாநகரின் ஓர்சார் உள்ள இடைச்சேரியில் வாழ்ந்த மாதிரி என்பாள் எதிர்ப்பட, கவுந்தி அடிகள் 'இடைக்குல மாதர்க்கு அடைக்கலந்தந்தேன்' என்று கூறிக் கோவலனையும் கண்ணகியையும் மாதரியென்னும் மாதர்பால் சேர்த்தனர். உடன்பெற்ற இருவரையும் அழைத்துச் சென்று, மாதிரி தன் வீட்டில் அவர்களை அன்புடன் உபசரித்தனள்.

ஊழ்வினைப்பயன் ஊட்டுங்காலம் அணுகிற்று. யாரே ஊழ்வினையைத் தடுக்கவல்லார்? 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்ற குறளின் பொருளை அறியாதவர் யார்? இடையர் மனை இருந்த கோவலன் தனதன்பிற் சிறந்த கண்ணகியின் காற்சிலம்பை விற்று வாணிபஞ் செய்து, அதனுல் தான் பல செல்வம் பெறலாம் என எண்ணியே மதுரைவந்தான். அவ்வாறே கண்ணகியின் அழகிய காற்சிலம்பைப் பெற்று மதுரை வீதியிற் சென்று விற்றுவருவேன் என்று பிரியாவிடை பெற்றுப் பிரிந்தான்.

மதுரைமாநகரின் தெருவழியே சிலம்பை விற்கச் சென்ற கோவலன் எதிரில் வரும் அரசனது பொற்கொல்லனைக் கண்டான். அவன் மூலமாக அரசனை அடையின் அரும்பெரும் பொருள் பெறலாம் என எண்ணியவனுகி அவனை அடுத்தான். சிலம்பைக் காட்டினுன். முன்னொருநாள் அரசன் சிலம்பைக் கவர்ந்த அக்கொடியோன், இச்சிலம்பின் மூலம் உயிர் பிழைக்கலாம் என்று எண்ணினவனுகிக் கோவலனை ஆண்டே இருக்கச் செய்து, அரசனை அடைந்து 'அரசே நம் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்த கள்வன் வாயிற்புறத்து உள்ளான்' என அறிவிக்கக் காமவசத்தனுய் இருந்த அரசன் ஊழ்வினை வயத்தான் 'அவனைக் கொன்று சிலம்பினைக் கொண்டு வருக' என்றான். கோவலன்—ஒன்றுமறியாத மனம் கொண்டவன்—கொலை செய்யப்பட்டான்.

இடைச்சேரியில் இருந்த கண்ணகி பல தீய சகுனங்களால் வருந்த முற்றுள். மதுரையிருந்து அவ்வழிச் செல்வோர் கோவலன் கொலையைப் பற்றிக் கூறினர். கற்புடைப்பெண்டு கதறினுள். தன் வாழ்வழிந்ததை எண்ணி வருந்த முற்றுள். ஒரு குற்றமும் செய்தறியாத என் கணவனைக் கொன்ற இவ்வூரில் தெய்வமில்லையோ! தீது தீர்த்த அறவோர் இல்லையோ! என்று கதறினுள்.

'தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்
வைவாளிற் றப்பிய
மன்னவர் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்'

சான்றோர் உண்டுகொல்
சான்றோர் உண்டுகொல்
ஈன்ற குழவியை
எடுத்தவளர்க் குறூஉம்
சான்றோர் உண்டுகொல்
சான்றோர் உண்டுகொல்

என்பன இளங்கோவடிகள் வாக்கு.

பெருந்துயருற்ற பெருந்தகையின் வான்வழிச் செல்லும் கதிரவனை நோக்கித் தன் கணவன் கள்வனே என்று கேட்க, 'அவன் கள்வனல்லன், அவனைக் கள்வனென்ற இவ்வூரை எரியுண்ணும்' என்றொரு ஒலி வந்தது.

அம்மொழிகேட்ட கண்ணகி, மதுரைவீதியில் பலரும் வியப்பும் அச்சமும் ஒருங்கே அடையக் கோவலன் கொலையுண்ட இடம் சேர்ந்தாள். அவள் செல்வதைக் கண்ட மக்கள் பலவாறு பலமொழி உரைத்தார். இறந்த கோவலனை எழுந்து தழுவி, பின் பதினேராம் நாள் பார்த்திடுக எனக்கூறி விழுந்தாள். பெருந்துயர்பெற்ற அக்கன்னி நெறிபிழைத்த மன்னவனிடம் நீதி உரைக்கச் சென்றுள். அவள் தோற்றம் கண்டோர் பலவிதமாக எண்ணிப் பதைத்தனர். மதுரைநகர் அழியுங்கொல்லோ என மனம் வருந்தினர்; பார்ப்பவர் நடுங்கப் பத்தினியும் பாராளும் பாண்டிய மன்னன் மனை வாயிலை எய்தினுள்.

'வாயிலோயே வாயிலோயே
யறிவறை போகிய
பொறியறு நெஞ்சத்(து)
இறைமுறை பிழைத்தோன்
வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்
றேந்திய கையள்
கணவனை இழந்தாள்
கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே'

என்று அறமுரைக்கும் ஆற்றல் விளம்பினுள். இவள் தோற்றத்தையும் மாற்றத்தையும் கண்டும் கேட்டும் நின்ற வாயிற் காவலன் உள்புகுந்து அச்சத்தோடு அர


தொடர்ச்சி 3ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழக தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஸ்ரீ புரட்டாதி ௧௬ உ வியாழக்கிழமை

## விபரீதயுத்தம் முடிவதெக்காலம்?

உலக சரித்திரத்திற்கு எட்டிய காலத்திலே முன்னர் எப்போதாயினும் இப்படியான கொடிய அநர்த்தத்தோடு கூடிய யுத்தம் நிகழவில்லை யென்று சொல்லலாம். இற்றைக்கு இருபத்துமூன்று வருடங்கட்கு முந்தி நடந்த மகாயுத்தம் நான்கு வருடகாலம் நடந்ததெனினும் இந்தச் சமர்போற் கொடியதன்று; பெரிய அநர்த்தத்தை விளைத்ததன்று; அந்த யுத்தத்தை நேரிற் கண்டவர்கள் கேட்டவர்களும் அதனாற் கஷ்டப்பட்டவர்களுட் பெரும்பான்மையோர் இப்பொழுதும் சீவந்தர்களா யிருக்கிறார்கள். அந்த யுத்தத்திலே யுத்தத்திற் சம்பந்தப் பட்டவர்களுக்கு உயிர்ச்சேதம் பொருட்சேதம் நேர்ந்தனவென்று சொல்லலாமே யொழிய, போர் வீரரை யொழிந்த ஏனையோர்க்கு ஊரிலுள்ள சனங்களுக்கு விருத்தர் பாலர் பெண்கள் என்ற தொகுதியார்க்கு, ஆலயங்களுக்கு, வித்தியாசாலைகளுக்கு, அரமனைகளுக்கு, வைத்தியசாலைகட்கு, புராதன கட்டடங்கட்கு, இன்னும் அரியன பெரியன எவைகளோ அவைகளுக்கு அதிக அநர்த்தம் விளைந்ததாக அறிந்திலேம்; இந்த யுத்தத்திலெனிலோ இப்படிப்பட்ட உயிர்களுக்குந் தாபனங்களுக்குஞ் சொல்லொணாச் சேதம் நேர்ந்து வருவதை எவரும் அறிவர்.

இவை மாத்திரமா, பன்னூற்றுக் கணக்கான வியாபாரக் கப்பல்கள் கடலில் மாண்டன; இன்னும் பன்னூற்றுக்கணக்கான பாரிய யுத்தக் கப்பல்களும் சிறிய யுத்தக் கப்பல்களும் ஆழியில் அமிழ்ந்தின. அந்தரத்திற் செல்லும் ஆயிரக்கணக்கான ஆகாயக் கப்பல்கள் சுட்டுப் பூமியில் வீழ்த்தப்பட்டன; இன்னும்பல ஆகாயக் கப்பல்கள் நிலைகெட்டுச் சிதைந்து தாமாகக் கடலிலுந் தரையிலும் வீழ்ந்து அழிந்தன; இப்படி இன்னுஞ் சொல்லமுடியாத நினைக்க இயலாத எண்ணிறந்த உயிர்ச்சேதம் பொருட்சேதம் இரண்டுவருடத்திற்கு மேற்பட நேர்ந்துவருகின்றன; இன்னமும் நேர இருக்கின்றன. இன்னும் இந்தக் கொடுஞ் சமரிற் பல அரசர்கள் சில அரசிகள் சில பிரசாதிபதிகள் தத்தம் நாடுகளைப் பறிகொடுத்து நிலைகெட்டு நாட்டைவிட் டகன்று ஒதுக்கிடந் தேடலாயினர். சின்ன மீனெல்லாம் பெரிய மீன்களுக்கிரை யென்றவாறு எத்தனையோ சிறிய இராச்சியங்கள் எக்காரணமுமின்றி யுத்தத்திற் சம்பந்தப்பட்ட வல்லரசுகளுக்கு இரையாயின. ஜர்மனியர் பல நாடுகளைக் கைப்பற்றினர்; இத்தலியர் சில நாடுகளைப் பிடித்தனர்; ஆனால் தாம் அரிதிற் பெற்ற பெரிய சக்கிராதிபத்தியத்தை இழந்தனர். ருஷியர் சில சிறு நாடுகளைக் கவர்ந்தனர்; இப்பொழுது தம் தேசத்திற் சில பாகத்தை இழக்கலாயினர்; பிருத்தானியரும் அமரிக்கரும் தத்தம் பாதுகாப்பிற்கெனக் கூடி இரண்டொருநாட்டைத் தனித்தனி தம் ஆதிக்கத்துக்குள்ளாக்கினர்; கிழக்கேயுள்ள ஐப்பானும் சீனத்திலே தாம் பிடித்த பாகங்களை இழந்து புதிய நாட்டைக் கைப்பற்றலாயிற்று; இன்னமுங் கைப்பற்ற முயலுகின்றது.

இவைகளை யொழிய இந்தப் பெரும் போரில் இன்னும் பல விபரீதங்கள் அறியக் கிடக்கின்றன; ஒரு மகாயுத்தத்தில் மாறுபட்ட இரு இராச்சியங்களுக்குத் துணைப்படையாக வேறு இராச்சியங்களுஞ் சேர்ந்து சமர் புரிந்தால், அப்படிச் சேர்ந்த துணைப்படை வெற்றி வந்தாலும் தோல்வியுற்றாலும் யுத்தம் முடியும்வரை தாம் சேர்ந்த பக்கத்திலேயே நின்று சமர்புரிவது வழக்கம். இந்த உண்மையைப் பாரதப் பெரும் போரில் நாங்கள் படித்திருக்கிறோம். பிந்தி முடிந்த மகாயுத்தம் முதலியவற்றிற் கண்டிருக்கிறோம். ஆனால் இந்த யுத்தத்தில் அப்படியல்ல; பிருத்தானியருக்கு உற்ற துணையாகநின்ற பிரான்ஸியர் பின்னர் அவர்களுடன் மாறுபட்டு ஜர்மனியருடன் சேர்ந்து பிருத்தானியரை எதிர்க்க, பிருத்தானியரும் பிரான்ஸியரைப் பகைவராக மதித்துச் சமர் புரியலாயினர். இப்படியே ஜர்மனியருக்குப் பெரும்படைத்துணையாகநின்று இரண்டு வருட காலம் வரையில் பிருத்தானியரையும் பிரான்ஸியரையும் பகைத்துப் போராற்றிய ருஷியரை ஹிட்லர் துரோகிகள் என்று மாறுபட்டுத் தாக்க, அந்த ருஷியருக்கு இப்பொழுது பிருத்தானியரும் அமரிக்கரும் துணை புரியலாயினர். இன்னும் இப்படியான மாறுதல்கள் என்ன என்ன வருமோ என்பதை எவரேனும் யூகித்தறிதல் முடியாது.

இவை இப்படியாக, உலகத்திலே இவ்விதமான பெரும் அழிவு நடக்கவும் தெய்வம் விட்டு விட்டுக் கண்மூடிக் கொண்டிருக்கிறதோ என்று கீழைத் தேசத்தவர்களாகிய நாங்கள் நினைக்கப் பழகிவிட்டோம்; அடுத்துப் பெருமழை பெய்ய அதனால் ஊருக்குப் பெரும் ஆபத்து வர அம்மழையை அதற்குமேற் பெய்யவொட்டாது தடுக்குந் தெய்வம், சில மணிநேரம் பிரசண்ட மாருதமென்னும் பெருங்காற்றடிக்க, அதனால் நாட்டினர்க்குப் பெரும் அநர்த்தம் விளைய, இன்னும் அப்படிக் காற்றை அடிக்கவிட்டால் ஊர் நாசமாய்விடுமென்று தடுத்தருளுந் தெய்வம், இவைகளெல்லாவற்றைக்காட்டிலும் பன்மடங்கு அநர்த்தம் இரண்டுவருட காலமாக ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கவிட்டுப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறதா என்று இக்காட்டினவர் தெய்வத்தை நோவக் காணுகின்றோம்! யுத்தத்திற் சம்பந்தப்பட்டிருக்கும் அதிகாரிகளுள்ளும் தெய்வம் தமக்குத்தான் துணையென்று ஹிட்லர் சொல்லுகிறார்; இல்லை "எமக்குத்தான் ஆண்டவன் உதவி புரிவான்" என்று மிஸ்டர் சேர்ச்சிலும் சொல்லுகிறார். ருஷிய அதிகாரி மாத்திரம் தெய்வத்தைப்பற்றி யொன்றும் பேசக் காணோம். இந்தக் கொடிய போரிலே தெய்வம் ஆருக்குத் துணை செய்வதென்று தெரியாது யோசித்தபடி யிருக்கின்றது போலும்! உலகத்திலே செல்வம் அதிகாரம் கல்வியறிவு நவநாகரிக மென்னு மிவைகளைப் படைத்தவர்களாய் உலகத்தின் ஏனைய தேசங்களிலுள்ள நாட்டினரை யெல்லாங் கட்டியாண்ட ஐரோப்பாக் கண்டத்தினருக்கு இப்படியான அநர்த்தம் நேரலாகுமோ என்று கீழைத் தேசத்தவர்களாகிய எங்களை யாருங் கேட்டால் "முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே" என்ற பெரியார் வாக்கைப் பதிலாகச் சொல்ல முடியுமே யல்லாமல் வேறு எதனைச் சொல்வேம்.

---

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்)

### சகோதர பாசம் பொல்லாதது

"கண்ணே! சுந்தரம்! தங்கைச்சி! இராசாத்தி! ஏனம்மா பேசாமற் கிடக்கிறீர்!" என்று தங்கையின் முகாரத்தைத் தடவி நெற்றியில் தொட்டு ஆதரவுடன் கூப்பிட்டாள் அமிர்தாம்பிகை; ஒன்றுக்கும் பதில் இல்லை. ஆச்சி! ஆச்சி! ஓடி வாருங்கள். இது என்ன என்று பாருங்கள்! தங்கைச்சி பேசாதாம்! ஐயோ! என்மனம் பதறுகிறது! சரீரம் நடுங்குகிறது! நா உலருகிறது; தலை சுழலுகிறது! ஏனோ தெரியவில்லை; ஆச்சி! என்று சுடுமணலில் அகப்பட்ட புழுப்போலத் துடிதுடித்து நின்றாள் தாங்காது. "மகளே, பயப்பட வேண்டாம்; அப்படி ஒரு பிழையும் வராது" என்று சொல்லிக் கொண்டு சாமியம்மாள் விரைந்து வந்து சுந்தராம்பிகையின் நெற்றியிலும் மார்பிலும் தொட்டுப் பார்த்துவிட்டு "மகளே, மகளே, உனக்கு என்ன அம்மா செய்கிறது" என்று பதைபதைப்புடன் கேட்டாள். பதிலில்லை; இராமனும் நின்று கலங்கினான். "இராமு! வைத்தியரை அழைத்துவரப் போனார்களே! இன்னமுங் காணோமே வருகிறார்களோ என்று தெருவாற் போய்ப் பார்" எனச் சாமியம்மாள் சொல்ல, இராமன் விரைந்து தெருப்பக்கத்தை நோக்கிச் சென்றான். அமிர்தாம்பிகை தன் சகோதரி படுத்துக் கிடந்த கட்டிலிலேயே தங்கையின் பக்கலில் இருந்து கொண்டு அவள் நெற்றியைத் தொட்டுப் பார்ப்பதும் முகத்தையும் மார்பையும் கை கால்களையுந் தடவுவதுமாகக் கலங்கினாள். தான் கூப்பிட்ட பொழுதும் தங்கை வாய் திறவாதது, சாமியம்மாள் அழைத்தபோதும் வாய் பேசவில்லையே என்றதை எண்ணிய மாத்திரத்தே அமிர்தாம்பிகை தன் சகோதரிக்கு ஏதோ ஆபத்தான நோய் என்று மனத்தில் நிச்சயித்து விட்டாள். "அம்மா, அமிர்தம், நீ கலங்காதே, கடுமையாகக் காய்ச்சல் காய்கிறது; நோயின் மிகுதியினால்தான் பிள்ளை பேசாமற் கிடக்கிறது; இப்பொழுது வைத்தியர் வந்து மருந்து கொடுக்க எல்லாம் சுகமாய் விடும் அம்மா, உன் தங்கைச்சியின் வருத்தத்திலும் உன் வருத்தம் அதிகமாக இருக்கிறதே; நீயோ சிறுபிள்ளை, உனக்கு அனுபவமில்லை; நான் இப்படி எத்தனை நோயாளிகளை வைத்துப் பராபரித்திருக்கிறேனே; இது ஒரு பெரிய வருத்தமல்ல; ஏதோ வாயு தலையில் ஏறிவிட்டது; அதனாற்றான் தங்கைச்சி பேசாமற் கிடக்கிறாள்..." என்று சாமியம்மாள் தன்னால் ஆனமட்டும் அமிர்தாம்பிகைக்குத் தேறுதல் வார்த்தை சொன்னாள். அத்தேறுதல் வார்த்தைகள், புறக்குடத்தில் ஊற்றிய நீர்போல அமிர்தத்தின் காதிற் புகுந்தில; "கண்ணே, என் உடன்பிறப்பே, நான் உனக்குச் செய்த பிழை என்ன அம்மா! என் மனம் குமுறப்பதைத்து நடக்கும் நீ இன்றைக்கு நான் உன்பக்கத்திலிருந்து புலம்பப் பார்த்துக் கொண்டு கிடக்கின்றாயே; பேசக்கிடையா என் நாயகமே! எனக்காக வல்லவா நீ உன் பெற்றாரைப் பிரிந்து உற்றாரை விட்டு ஊரை விட்டு உனக்குரிய செல்வச் சிறப்பெல்லாந் துறந்து பரதேசஞ் செல்லப் புறப்பட்டாய். உன்னைத் தனியேவிட மனம் பொறுக்கலாமல் நானும் உன்னுடனே புறப்பட்டேன்; அப்படி வந்த என்னை நட்டாற்றில் கைவிட்டு நீ போய்விட முடியுமா? அக்கா, நீ மகள் தான் எனக்குச் சகோதரமும் தாயும் தகப்பனும் என்று பல முறையுஞ் சொல்லுவாயே! அந்த வார்த்தைகளை நினைக்க என் வயிறு பற்றி எரிகின்றதே; என் கண்ணே! ஒரு காலத்தில் எங்கள் அப்பா எங்களைத் தேடி வந்து என்னைச் சந்தித்து, எங்கே என் பிள்ளை சுந்தரம் என்று கேட்டால், நான் அவருக்கு என்ன பதிலையம்மா சொல்லுவேன்.

### தெய்வத்தை இரத்தல்

ஆ! தெய்வமே! பன்னிரண்டு கண்கொண்ட பரம் பொருளே! ஏழையைச் சோதிக்கின்றாயா! உன்னுடைய தலத்திற்கு வந்து சேவிக்கக் கண்கண்ட பலன் இது தானோ! பாவியேன் படும்பாடு உனக்குத் திருவுளச் சம்மதமா? கந்தா! தெய்வநாயகி காந்தா! வள்ளி மணாளா! வடிவேலா! மயில்வாகனா! ஒரு குன்றைப் பொடியாக்கி, ஒரு குன்றினிற் கோயில் கொண்ட குமரா! அசுரரை வீட்டிச் சுரரைச் சிறைமீட்ட உனக்கு என் தங்கையைப் பாதுகாத்து என் கவலையைப் போக்கி விடுதல் ஒரு பெரிய கருமமா? சகோதரபாசம் என்னுள்ளத்தை ஈர்க்கின்றதே! கருணையங்கடலே, குன்றக் குடியானே! கதிர்காமத்தையா! நல்லூர்க் கந்தா! என் உடன்பிறப்பைப் பிரிந்து நான் உயிர் வாழேன் என்பதை நீயறியாயா? ஐயா! முருகையா! நீ இரங்காவெனில் இனித் துயரம் பொறுக்கமாட்டேன்! என்று முறையிட்டு,

"ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனாத்
தேறின னவனடி சிந்தை செய்தனன்
மாறிலி யருவிநீர் வழியுங் கண்ணினான்"

என்ற தோத்திரத்தைப் படித்தாள். "எம்பெருமானே! உனக்கு அடைக்கலம்" என்றாள்; அறிவு சோர்ந்தாள் அமிர்தம்; அதனைக் கண்டு சாமியம்மாள் மனந் தடுமாறியவளாய் அவளை அணைத்தெடுத்து அயலிலுள்ள படுக்கையிற் கிடத்தினாள்; சாமியம்மாளின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் சொரிந்தது, அவளும் மயூரகிரி வள்ளலை வேண்டினாள்.

### பயப்படவேண்டாம்

இதற்கிடையில் வைத்தியரைத் தேடிப்போன இருவரையுந் தேடிப் பின்னரும் மடத்தில் நின்றோர் சிலர் போனார்கள். வழக்கமாக அங்கேயுள்ள டக்டர், சில மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு ஊருக்கு ஆபத்தான நோயுற்ற ஒருவரைப் பார்க்கப் போய்விட்டாரென்றும் இப்போதைக்கு அவர் வரமாட்டாரென்றும் வைத்தியசாலையிலுள்ளவர்கள் மடத்திலிருந்து போனவர்களுக்குச் சொன்னார்கள். போனவர்களுள் ஒருவர் "எங்கள் கோயில் அன்ன சத்திரத்தில் ஒரு டக்டர் வந்து தங்கியிருக்கிறார்; நேற்றுப் பின்னேரம் நான் அவரைப் பார்த்தேன்; அவரையாயினும் போய் அழைத்துச் செல்வோம், வாருங்கள்" என்று சொல்லித் தம்முடன் வந்த மற்றையோரையும் உடன் கூட்டிக் கொண்டு அன்னசத்திரத்திற்குப் போனார். நேரம் இரவு பதினொரு மணிக்கு மேலாய் விட்டதால் சத்திரத்திற் பலர் உறங்கிவிட இரண்டொருவர் தாம் முருகன் திருப்புகழ் பாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை இவர்கள் பார்த்து "ஐயா, உங்கே ஒரு டக்டர் இருக்கிறாராம்; அவர் படுத்துவிட்டாரா" என்று மிக்க ஆவலுடன் கேட்க, அவர்கள் "சற்று முன்புதான் போய்ப் படுத்தார்; [illegible], எழுப்பிப் பார்க்கிறோம்; பின் அறையிலே தான் படுத்திருக்கிறார்" என்று டக்டர் படுத்திருக்கும் அறையை நோக்கிப் போனார்கள். "டக்டர் ஐயா" என்று கூப்பிடவே, அவர் அந்நேரம் உறங்காதிருந்தமையால் "ஏன்" என்று வினவிக் கொண்டு அறையைத் திறந்து வெளியே வந்தார். "ஐயா, யாருக்கோ ஆபத்தான நோயாம்; இந்தவூர் டக்டரைப் போய்ப் பார்த்தார்களாம்; காணவில்லையாம்; உங்களை அழைத்துக் கொண்டு போகும்படி வந்து சத்திரத்தின் முற்பக்கத்தில் ஆவலுடன் நிற்கிறார்கள்" என்று சொல்ல, அவரும் முற்புறத்து வந்தார். "ஐயா எங்கள் மடத்தில் இரண்டு மூன்று பெண்கள் யாத்திரையின் பொருட்டு வந்து தங்கியிருக்கிறார்கள்; அவர்களுள் ஒரு பெண்ணுக்குச் சடுதியில் நோய்கண்டு ஆபத்தாயிருக்கிறது; வைத்தியசாலைக்குப் போனோம்; அங்குள்ள டக்டர் எங்கோ தூரத்திற்குப் போய்விட்டாராம்; இப்போதைக்கு மீண்டுவரமாட்டாராம்; ஆனதால் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு வந்தோம்; ஒருமுறை வந்து அந்தப் பிள்ளையைப் பார்த்தால் நல்லது; அந்தப் பிள்ளையின் நோயல்ல! ஐயா பெரிது; அந்தப் பிள்ளையின் தமக்கையாம் இன்னொரு பெண் படும் மனவருத்தம் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது; கார் வேண்டுமானாலும் பிடித்து வருகிறோம்" என்று பரிவுடன் சொன்னார்கள்; "கார் வேண்டாம், சமீபந்தானே, நான் வரத் தடையில்லை; ஆனால் என்னிடத்தில் மருந்துகள் வதியில்லை; நான் தலயாத்திரைக் கென்றே வந்தேன்; சரி, வருகிறேன்" என்று சொல்லி டக்டர் மீண்டு தம் அறைக்குட் சென்று 5 நிமிஷத்தில் தம்மை உடுத்திக் கொண்டு புறப்பட்டார். அழைக்க வந்தவர்கள் மீண்டுபோகும்போது "ஐயா, இன்ன குணமென்று கண்டு மருந்தையுஞ் சொல்லிவிட்டால், நாங்கள் வேண்டிய மருந்தை எங்கே நிற்கிறதும் உடனே தேடிக்கொண்டு வருவோம்; அதனைவிட்டு நீங்கள் யோசிக்க வேண்டாம்" என்று பேசிக் கொண்டு டக்டருடன் மடத்தை யடைந்தார்கள். அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டுநின்ற இராமன் போனவர்கள் டக்டரையும் அழைத்துக் கொண்டு வருவதைக் கண்டு முந்தி ஓடிப்போய் "ஆச்சி, ஆச்சி, டக்டர் வருகிறார்" என்று சந்தோஷத்துடன் சாமியம்மாளுக்குச் சொல்ல, "அமிர்தம், எழுந்திரம்மா, வைத்தியர் வருகிறாராம்" என்று அவளைத் தடவி எழுப்ப, அயர்ந்து கிடந்த அமிர்தம் உடனே எழுந்து ஆவலுடன் கண்களில் நீர்சிந்தத் தன் தங்கையின் பக்கத்தே அவளுடைய முகத்தைப் பார்த்தபடி நின்றாள். மடத்துட் பிரவேசித்தவுடன் டக்டர் "உள்ளே வரலாமா" எனலும், "ஆம், ஐயா, வாருங்கள்! வாருங்கள்! நலம் வரலாம்" என்று உள்ளே நின்ற சாமியம்மாளும் இராமனும் சொல்லியழைத்தார்கள்; நோயாளியின் படுக்கைக்குப் பக்கத்திலே ஒரு நாற்காலி இடப்பட்டது; டக்டர் அதில் இருந்தார். "இப்பொழுது உறக்கமோ" என்று அவர் சாமியம்மாளை வினவ, "இல்லை ஐயா, பொழுது பட்ட நேரத் தொடக்கம் பேச்சே கிடையாது; அறிவில்லை" என்று கண்கலங்கியபடி சொல்ல, "ஏன் ஆச்சி, பயப்படுகிறீர்கள்; இந்தத் தலத்தில் அப்படியான பிழை ஒன்றும் நடக்கமாட்டாது; நீங்கள் மனம்பதற வேண்டாம்; வயசு போன நீங்கள், அனுபவம் படைத்த நீங்களே இப்படிக் கலங்கினால், இங்குள்ள ஏனைய இளம் பிள்ளைகள் இன்னும் அதிகமாகப் பயப்படுவார்களே" என்று சொல்லிக் கொண்டு சுந்தராம்பிகையின் இரு கைகளையும் ஒன்றொன்றாக மெல்ல எடுத்து நாடி பார்த்தார்; டக்டர் வாயிலிருந்து எப்படியான வாக்குப் புறப்படுமோ என்ற ஆவலுடன் அமிர்தாம்பிகை சாமியம்மாள் இராமன் முதலானோர் எதிர்பார்த்தபடி தயங்கி நின்றார்கள். 3 நிமிஷம் வரையில் கை பார்த்து யோசித்துவிட்டு, "நீங்கள் ஒருவரும் பயப்படவேண்டாம்; இது சன்னியல்ல, தோஷமல்ல, அந்த சித்தவியானமோ, கபவியானமோ தெரியவில்லை, ஒரு வாயு தலைக்கேறிவிட்டது; இங்கிலீஷ் மருந்துகளை இப்பொழுது எழுதித் தந்தால் நீங்கள் போய் இந்த நேரத்தில் வாங்கி வருதல் கஷ்டம்; நான் ஆயுர்வேத முறைப்படி சில சரக்குகளைக் குறித்துத் தருகிறேன், இவைகளை நீங்கள் இலகுவாகத் தேடலாம்" என்று சொல்லித் தம் சட்டைப் பையிலிருந்த "டயறி" எனப்படும் குறிப்புப் பிரதியில் ஒரு ஒற்றையைக் கிழித்து, அந்த பையிலிருந்த ஊற்றுப் பேனையினால் அத்துண்டிற் சில சரக்குகளைக் குறித்துக் கொடுக்க, அங்குள்ளோர் சிலர் அச்சரக்குகளைக் கொண்டு சீக்கிரம் போய், 10 நிமிஷத்திற்கிடையில் அயலிலே வாங்கிக் கொண்டு வந்து டக்டரிடம் கொடுத்தார்கள். வைத்தியர் வாங்கிச் சரிபார்த்துவிட்டு, அவற்றுள் இரண்டு சரக்கை எடுத்து, "அம்மியை ஈரமில்லாமல் நன்றாகத் துடைத்துவிட்டு இவைகளைப்பொடியாகச் சேர்த்து அரைத்து வாருங்கள்" என்று சொல்லிச் சாமியம்மாளிடம் கொடுத்தார். மற்றைச் சரக்குகளை எடுத்து 'இவைகளை மண்பாத்திரத்தில் இட்டு ஒருபடி தண்ணீர் ஊற்றிக் கால்படி யாகும்வரை வற்ற எரித்துக் கொண்டு வாருங்கள்' என்றார்; மடத்திலுள்ள மற்றையோருட் சிலர் அந்தக் கருமத்தைச் செய்யலாயினர். இதற்கிடையில் சாமியம்மாள் அரைத்த அரையைக் கொண்டுவந்து டக்டரிடம் கொடுக்க அவர் அதில் சிறிதைத் தம் மூன்று விரலைச் சேர்த்துக் கிள்ளிச் சுந்தராம்பிகையின் உச்சியில் வைத்துப் பெருவிரலால் தேய்த்தார். சில நிமிஷத்தில் சுந்தராம்பிகை "அக்கா" என்று மெல்லச் சொல்லிக்கொண்டு கண் விழித்தாள். "கண்ணே நான் இங்கே நிற்கிறேன், அம்மா" என்று சொல்லிக் கொண்டு ஒரு புறத்தே ஒதுங்கி நின்ற அமிர்தாம்பிகை தங்கையின் தலைமாட்டிற் போய் நின்றாள். நின்றோரெல்லாரும் மனம் ஆறுதலடைந்தார்கள். ஆனாலும் அறிவு பூரணமாகத் தெளியவில்லை.

### முருகன் திருவிளையாட்டு

இதற்கிடையில் அந்த வைத்தியர் "நான் சொன்ன பிரகாரம் குடிநீரை மூன்று மணித்தியாலத்திற் கொருமுறை கொடுங்கள்; அப்படிக் கொடுக்கும்போது, இச்சாருங்கள் இந்த மாத்திரையிலும் ஒவ்வொன்றை உரைத்துக் கலந்து கொடுங்கள்; அப்படி ஒருமுறை இருமுறை குடிக்க மயக்கம் முற்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

---

# பெண்சோர வழக்கு

## 1-ம் 3-ம் எதிரிகளுக்கு ஒவ்வொரு வருடம் 2-ம் எதிரிக்கு கோடு முடியும் வரை மறியலும் அபராதமும்

(நமது நிருபர்)

வண்ணார்பண்ணையில் வசிக்கும் நாகலிங்கம் மனைவி நாகமுத்து என்பவளுடைய பாதுகாப்பிலிருந்த பதினாறு வயதுக்குட்பட்ட இரத்தினம் அல்லது துரையம்மா என்பவளை அவ்வூர் நன்னியன் வயிரமுத்து, செல்லன் கந்தையா, சின்னையன் வேலுப்பிள்ளையாகியவர்கள் கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சாரமாவது:

இரத்தினம் அல்லது துரையம்மாவின் தாயார் இவள் சிறு வயதாய் இருந்த காலத்தில் இறந்துவிட இவளுடைய பாட்டனும் பாட்டியுமாகப் பாதுகாத்து வந்தனர். இவளுடைய தகப்பனார் மறுமுறை விவாகஞ் செய்து வேறிடத்தில் சீவித்து வந்தான். 2-8-41 ந் திகதிக்கு முன்னர் இவளை எதிரியாகிய கந்தையாவுக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்படி எதிரிபக்கத்தார் பாட்டனிடம்கேட்டிருந்தனர். எதிரிகளும் வழக்காளிகளுஞ் சொந்தக்காரர்கள். முதல பாட்டனார் விவாகஞ் செய்து கொடுக்கச் சம்மதித்திருந்தவர். பின்னர் மறுத்தார். இதன் பின்னர் மேற்சொல்லிய 3 எதிரிகளும் சென்று 2-8-41 ந் திகதி இரத்தினம் அல்லது துரையம்மா இருக்குமிடத்திற்குச் சென்று அவளை அழைத்துச் சென்றனர். இச் சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் இவளுடைய பிறப்புக் கொப்பியை எடுத்துப் பார்த்தபோது இவளுக்கு 16 வயது பூர்த்தியாகவில்லை எனக் கண்டனர்.

நீதிபதி இவ்வழக்கில் சில சாட்சிகளின் வாய்முறைப்பாட்டைப் பதிவு செய்தபின்னர் எதிரிகட்காக ஏற்பட்ட நியாயதுரந்தரர்கள் இவ்வளவில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும் வழக்கின் சாரத்தை உத்தேசித்துத் தீர்ப்பை மிகவுங் குறைவாகத் தீர்க்கும்படியும் நீதிபதியிடங் கேட்டனர். நீதிபதி எல்லாவற்றையும் உத்தேசித்து 1-ம் 3-ம் எதிரிகளை ஒவ்வொரு வருடக் கண்டத்தைப் பிணையில் விட்டு 2-ம் எதிரிக்கு 150 ரூபா அபராதமும் கோடு முடியும் வரை மறியற்றண்டனையும் விதித்தார்.

## துணிகள் விஷயத்திலேமாற்றும்

### எதிரிக்கு வாறண்ட்

பெரியகடையில் புடவை வியாபாரஞ் செய்யும் H B றங்கலால் என்பவரிடமிருந்து ரூபா 300 பெறுமதியான 'மற்பீஸ்' துணிகளை ஏமாற்றி வாங்கிச் சென்றதாக ஆரியகுளத்தடியில் வசிக்கும் K. தம்பிப்பிள்ளை என்பவர்மீது குற்றஞ்சாட்டி ஒரு வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்றர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையிற் றொடரப்பட்டது. H B றங்கலால் சொன்னதாவது:

சென்ற 26-8-41ந் திகதி எதிரி என்னுடைய கடைக்கு வந்து ஒரு 'மற்பீஸ்' என்னவிலை என்று கேட்டார். நான் ரூபா 15 விலையென்று சொன்னேன். அவர் என்னிடம் இருபது பீஸ் தரும்படியும் அதற்குரிய பணத்தை அரைமணித்தியாலத்தில் திருப்பிக் கொண்டு வந்து தருவதாயும் இல்லாவிட்டால் பீஸ்களையே திருப்பித் தந்து விடுவதாகவும் சொன்னார். நான் அவரிடம் 20 பீஸ்களைக் கொடுத்தேன். அவர் திரும்பக் காசை அல்லது பீஸ்களை என்னிடம் தரவில்லை. நான் அவரைத் தேடி மறுநாள் அவருடைய வீட்டிற்குச் சென்றேன். அவர் அங்கேயில்லை. பின்னர் விசாரித்தேன். அவர் அநுராசபுரம் சென்று விட்டதாக அறிந்தேன். அங்கேயும் ஒரு ஆளை அனுப்பினேன். அங்கும் காணவில்லை. துணிகளின் பெறுமதி ரூபா 300.

நீதிபதி எதிரிக்கு வருகிற 14-10-41-ந் திகதிக்கு வாறண்விட்டு வழக்கை மேல் விசாரணைக்குத் தவணையிட்டார்.

## கட்டுக்காசுக் கெடுத்த மெஷீன்

### அடைவு வைத்தவருக்கு வாறண்ட்

30-9-41

'சிங்கர்' தையல்மெஷீன் கொம்பனி மனேசர் அசன் லெப்பை முகமட் கனியா நல்லூரில் வசிக்கும் சின்னப்பு முத்தையா E C 462618 ம் இலக்க மெசினை மாதவீதக் கட்டுக்காசுக்கு விலைக்கு எடுத்து அதனை அடைவு வைத்ததாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கு நீதிபதி மிஸ்றர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையிற் றொடர்ந்தார்.

அசன் லெப்பை முகமட் கனியா கூறியதாவது:-

E C 463618 ம் இலக்கத் தையல் மெசினைச் சென்ற 22-2-41 ந் திகதி எதிரி மாதவிதம் காசுகட்டும் பொருத்தத்தில் விலைக்குக் கொம்பனியிலிருந்து எடுத்தார். இந்த மெசினை நாகலிங்கம் இராசதுரையிடம் விசாரித்தேன். அவர் அது தன்னிடம் அடைவாக இருக்கிறதெனக் கூறினர். நீதிபதி எதிரிக்கு வாறண்ட் விட்டு வழக்கை மேல் விசாரணைக்கு வருகிற 14-10-41 ந் திகதிக்குத் தவணையிட்டார்.

## திருடனுக்கு மறியற்றண்டனை

1-10-41

தற்போது சண்டிக்குளியில் வசிக்கும் இராமசாமி கணபதிப்பிள்ளை மீது இரு களவு வழக்குகள் பொலிசாரால் நீதிபதி மிஸ்ரர் குவின்டன் பேர்ணண்டோ முன்னிலையிற்றொடரப் பட்டிருந்தது. இரண்டு வழக்குகளிலும் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தான். எதிரி முன்னரும் ஒருமுறை களவெடுத்த குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்திருந்தான். இப்போது ஒரு குற்றச்சாட்டிற்கு இரண்டுகிழமை மறியற்றண்டனையும் மற்றைய குற்றச்சாட்டிற்கு இரண்டுமாத மறியற்றண்டனையும் விதிக்கப்பட்டது.

## கஞ்சாவைத்திருந்தோருக்கு 50 ரூபா

30-9-41

கோக்குவில் மேற்கில் வசிக்கும் கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மா சட்டவிரோதமாக ஒன்றேகால் இறாத்தல் கஞ்சாவை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மதுப்பரிசோதகர் திரு. C. இராசசிங்கம் ஒரு வழக்கை யாழ்ப்பாணம் நீதிபதி திரு. குவிண்டன் பேர்ணண்டோ முன்னிலையிற் றொடர்ந்தார். எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி எதிரிக்கு ஐம்பது ரூபா அபராதம் விதித்தார்.

## சாராயம் வைத்திருந்தோருக்கு 20 ரூபா

மேற்குக் கோக்குவிலில் வசிக்கும் தம்பிப்பிள்ளை - சோமசுந்தரம் சட்டவிரோதமாகச் சாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை மேற்படி மதுப்பரிசோதகர் தொடர்ந்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு இருபது ரூபா அபராதம் விதித்தார்.

## காந்தி ஜயந்தி விழா

நிகழும் அக்டோபர் மீ ௪ உ சனிக்கிழமை, வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில், இலங்கை இந்தியர் காங்கிரஸ் யாழ்ப்பாணஜில்லாக் கமிட்டியாரால் மஹாத்மாகாந்தியின் 73-வது ஜனனதினம் கொண்டாடப்படும். காலை 9 மணியளவில் பூஜை, பஜனையுடன் கொண்டாட்டம் ஆரம்பமாகி, மாலை 3 மணிமுதல் 6 மணிவரை சிறந்த சங்கீதக் கச்சேரிகள் நடைபெறும். 6 மணிமுதல் 8 மணிவரை நடக்கும் பொதுக் கூட்டத்தில், இந்தியாவுக்கும் உலகத்திற்கும் மஹாத்மாவால் செய்யப்பட்ட அரும்பெரும் தொண்டுகளைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றப்படும். 8 மணிக்கு மஹாத்மாவின் உருவப்படம் பட்டினத்திலுள்ள பிரதான மான வீதிகள் வழியாக இரதத்தில் ஊர்வலமாகக் கொண்டுவரப்படும்.

கடித

## தேசாதிபதி தம்பதிகள் கொழும்பு திரும்பினர்

மேன்மை தங்கிய தேசாதிபதியும் லேடி கல்டிக்கொற்றும் சென்ற திங்கட்கிழமைகொழும்புக்குத்திரும்பிவந்து சேர்ந்தனர்.

## வாணிக உலகு

1-ம் பக்கத்தொடர்ச்சி

கப்படல் வேண்டும். கட்டுக் கழகங்களால் ஆதாயத்தில் ஒரு பகுதியைக் காப்புத்தனமாக ஒதுக்கி மிச்சத்தைத் தான் ஈவிப்பது முறை.

XVII

இந்தியாவிலும் வேறு இடங்களிலும் பல கட்டு ஸ்தாபனங்கள் காலக் கிரமத்தால் அழிந்துவிட்டன. ஏனெனில் அவைகளின் பங்குதாரர்கள் சேர்ந்து போக்கற்றுத் தொழிலை நடத்தி வந்தார்கள். அதைத் தடுக்க சனங்கள் அவைகளை ஆதரிக்கவில்லை.

அரசாங்கமும் அவைகளை ஆமோதிக்காது இம்பீரியல் வங்கிக்குச் சலுகை காட்டி வந்தது. ஆனது கொண்டு இவ்வகை ஸ்தாபனங்கள் முன்னேறுவதற்குக் காரணமில்லாமல் இருந்தது.

2. அன்னிய நாடுகளைப்போல இந்தியாவும் முன்னேற வேண்டுமாகில் செலாவணி விஷயத்திலும் பரிவர்த்தனை விஷயத்திலும் ஸ்திரமான ஒரு தேசிய மார்க்கத்தை அனுசரித்தாலொழியப் பயன்படாது. அவ்வாருன ஸ்திரமார்க்கத்தைப் பழக்கத்திற்குவரும் காரணங்களைக் குறைப்பதேயாம்.

XVIII

ஐந்தொகையும் அதன் பிரயோசனமும்

இத்தப் புள்ளி விவரத்திலிருந்து புலப்படுவது என்னவென்று தெரிந்து கொள்ளுமுன் அது எவ்வாறு தயாரிக்கப்படுகிறதென்பதை அறிய வேண்டியது அவசியம்.

2. பேரேடுகளில் பதியப்பட்டிருக்கும் ஆசாமிகளின் கணக்குகளும் கொண்டுவர இந்தியா வகைத் தொழில்களையும் செலாவணிக்குரிய வழிகளையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். செலாவணிக்கு முக்கியமான காசுக்கடைத் தொழிலை நடத்திவரும் ஸ்தாபனங்கள் சனங்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறவேண்டிய தவசியம்.

3. சுருக்கச் சொல்லில் தனித்த ஸ்தாபனங்களால் ஏற்படுவதென்னவெனில் வேறு வகைகளால் செலாவணியிலிருந்து மற்றுமுள்ள வேறு கணக்குகளையும் கூட்டி மொத்தங் கட்டி இறக்கிய பாகிகளின் சுருக்கமே ஐந்தொகையாகும். இது ஒரு தனிக் கணக்காகாது. ஒரு வியாபாரத்தையோ அல்லது தொழிலையோ நடத்தி வந்த அதிகாரிக்கு வருமாக வேண்டிய நிலுவை விபரமும் பிறருக்குச் செல்லாக வேண்டிய இனங்களின் விபரத்தையும் குறித்த காலத்தில் அவரால் தொழிலுக்கு விடப்பட்டிருக்கும் முதலின் அளவைக் காட்டுவதே ஐந்தொகையாகிறது.

3. ஐந்தொகையின் இடப்புறத்தில் பொறுப்பு தாரனுல் செல்லாக வேண்டிய எல்லா இனங்களும் மூலதனத்தின் அளவையும் காட்ட வேண்டும். நேரிடையாக வலப்புறத்தில் உரிமைப் பொருள் இனங்கள் யாவும் காட்டப்பட வேண்டும். அதாவது உரிமைப் பொருள் இனங்களின் மொத்தத்திலிருந்து செல் இனங்களின் மொத்ததவதை கழித்து வரும் தொகை தான் வியாபாரத்தில் சுழன்று நிற்கும் மூலதனமாகும்.

4. பதினேழாம் அத்தியாயம் 3 (2) பிரிவில் கட்டுக் கழகங்கள் ஆண்டுதோறும் கணக்குகளை முடித்துப் பங்குதாரர்களின தகவிப்பிற்காக ஐந்தொகையைப் பிரசுரிக்க வேண்டியதே முறை எனக் கூறப்பட்டதல்லவா? அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட ஐந்தொகையின் சுழுவை உதாரணமாக இங்கு காட்டியிருக்கிறது.

ஐந்தொகை

இடப்புறம்

| | |
|---|---|
| உத்திரவு பெற்ற மூலதனம் | |
| (1) பங்கு1க்கு £5வீதம் 50,000 பங்குகளுக்கு | £ 250,000. |
| செடி வட்டியோடு கூடிய 20,000 பங்குகளுக்கு | 100,000 |
| | £ 350,000 |
| (2) பங்கு 1க்கு £5 வீதம் விற்ற 30,000 பங்குகளுக்கு | 150,000 |
| கழிவு-வருவாகாதபாக்கி | 125 |
| | 149,875 |
| வட்டியுடன்கூடிய10,000 பங்குகளுக்கு | 50,000 |
| | £ 199,875. |
| (3) பங்கு1க்கு £100 வீதம் 1000 பங்குகள் | 100,000 |
| செடி வட்டி | 1250 |
| | 101,250. |
| (4) காப்புநிதி | £ 100,00 |
| (5) செல்லாக வேண்டிய உண்டியல் | 210,71 |
| (6) பேர்டு பணங்கள் | 456,37 |
| (7) கொடுபடாதவாடகை | 293 |
| (8) கொடுபடாத ஈவு | 490 |
| (9) லாபநட்டக்கணக்கு | 159.04 |
| | £ 394,520. |

வலப்புறம்

| | |
|---|---|
| (10) வாணிகஉரிமை—Good Will | £ 25,000 |
| (11) கட்டடங்கள் | 58,500 |
| (12) யந்திரங்கள் | 119,784 |
| (13) தளவாடம் | 707 |
| (14) சரக்கு இருப்பு | 24,040 |
| (15) நிலுவை-கடனாளர்களால் | 77,070 |
| உண்டியல்களால் | 18,019 |
| (16) இன்சூரன்ஸ் முன் பணம் | 370 |
| (17) ஈடுகள் | 42,640 |
| (18) வட்டி | 4,500 |
| (19) ஆரம்பச் செலவு பாகம் | 1200 |
| (20) இருப்பு ரொக்கம் | 22,690 |
| | £ 394,520 |

I பணம் விட்டவர்கள், கடன் கொடுத்தவர்கள் ஆகிய இவர்களுடைய பொறுப்பு எவ்வாறு பாதிக்கப்படுவதென்று ஐந்தொகையைக் கவனிக்கையில, 5, 6, 7 இலக்கமிட்ட இனங்கள் தான் செல்லாக வேண்டியவை. அவைகளின் மொத்தம் £ 67001 ஆகிறது. இத்தொகையைத் தற்போதே கொடுத்துத் தீரவேண்டியதாக நேர்ந்த போதிலும் 14, 15, 16, 17, 20 இலக்கங்களில் வசூலிக்க வேண்டிய இனங்களின மொத்தத் தொகையிலிருந்து கொடுத்துத் திருப்தி செய்யக்கூடிய வசதியைக் கொண்டதாக ஏற்படுகிறது. மேலும் தொழிலை நடத்தப் போதுமான அளவு முதலும் இருக்கிறதாகத் தோற்றுகிறது.

மேற்கூறிய நிலைமையல்லாது போனுல் தொழில் சரிவர நடந்தேற மூலதனத்தை அதிகப்படுத்த வேண்டி வருவதுடன் மற்றும் பல வேறு இடையூறுகள் சம்பவிக்கக் கூடும்.

II வட்டி கடன் சீட்டுப் பங்குகளைப் பெற்றவர்களின் பாத்தியதை எவ்வாறென்று கவனிக்க. சீட்டுக் கடன் பங்குகளின் தொகை £ 101,250. இத்தொகையைத்திருப்திசெய்ய11, 13 இலக்கமிட்ட இனங்களின் மொத்தம் அதிகப் பட்டிருப்பதால் பங்குதாரர்களின் பணத்திற்கு ஒருவித பயமும் கிடையாது.

III பங்குகளை வேண்டியிருப்பவர்களின உரிமை எவ்வாறென்று பார்க்கையில் வசூலான பங்குத்தொகை சற்றேறக்குறைய £ 200,000 ஆகிறது. ஒரு சமயம் தொழில் முறிந்து விடுமாகில் விநியோகத்திற்கு லாயக்கான உரிமைப் பொருள் இனங்களின் மொத்தம் £ 194,834 குறைவாகக்காணப்படுவதால் அவர்களுக்குச் சொற்ப சந்தேகம் ஏற்படக் கூடும்.

IV வட்டிக்குப் பணத்தை விடுவார்கள் பங்குதாரர்களைப் போலவே ஐந்தொகைப் புள்ளி விவரத்தைப் பிற கூறும் இரு நோக்கத்தோடே ஆராய்வர். அதாவது (1) விடும் பணத்திற்குத் தக்கபடியான ஈவு தொகை கிடைக்குமா (2) விடும் பணத்திற்குப் போதிய பெறுமதி இனங்களிருக்கின்றனவா என்றவைகளை நன்குக ஆராய்வர்.

XIX

மார்க்கட்டு நிலவர அறிவிப்புகள்

ஏழாம் அத்தியாயம் 7 (2) பிரிவில் ஒவ்வொரு பண்டத்திற்கும் தனிமையான மார்க்கட்டு உண்டென்று சொல்லப்பட்டது.

2. தினந்தோறும் மார்க்கட்டு நிதானத்தையும் கட்டையும் பற்றிய அறிவிப்புப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருவதை யாவரும் அறிவர். இவைகள் வியாபாரிகளின் நலத்திற்காகவே பிரசுரிக்கப் படுகின்றன. அவைகளை வியாபாரிகள் சரிவரப்பார்த்து வருவார்களேயாகில் தங்கள் தொழிலுக்குரிய பண்டங்கள் சாசமயத்தில் கிடைக்கும். சமயாசமயங்களை அறிந்து தக்க தருணத்தில் கொள்முதல் செய்து நல்ல பலனை அடையக் கூடியதாயிருக்கும்.

3. சாதாரணமாக அவ்வறிவிப்புகளில் குறித்த பண்டங்களின் விலைவாசி தேவை முதலிய விவரங்கள் அடங்கியிருக்கும்.

## சிவஞான போதம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுத்தி கூறியிருப்பதற்கிணங்க, சிவஞான போதத்து எட்டாஞ் சூத்திரத்திலே 'தம்முதல் குருவுமாய்' என்றும், 'ஐம்புலவேடரை விட்டு' என்றும் கூறியிருப்பதால் சிவரூபமாகிய குரு தரிசனமும், தத்துவ சுத்தியும் ஆண்டே நிகழுதலின ஒன்பதாஞ் சூத்திரத்தில் தத்துவ சுத்தி கூறப்படவில்லை என்பதாம்.

இச் சூத்திரத்தின் பொருள், குறையுணர்வாகிய பசுஞானத்தாலும் பாசஞானத்தினாலும் உணரப்படாத சிவபெருமானைத் தன்னறிவின் கண்ணே அவரது திருவடி ஞானத்திலே நாடுக. பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய கானற்றேர் போல்வது பாசக்கூட்டம் என்று அறிந்து அதனை நீங்கவே அப்பதி ஞானம் அவனுக்குக் குளிர்த்த நிழலாகும். அங்கிலே பிறழாதிருக்கும்படி ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி ஜபிக்க வேண்டும் என்பதாம்.

இது பற்றியே வழிநூலாகிய சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும்,

பாசஞா னத்தா லும்
பசுஞான த்தா லும்
பார்ட்டரிய பரம்பரனைப்
பதிஞா னத் தாலே
நேசமொடு முள்ளத்தே
நாடிப் பாத
நீழலிற் நில்லாதே
நீங்கிப் போதின்
ஊசைதரு புலகமெலா
மலகைத்தேர் ராமென்
றறிந்தகல வந்நிலையே
யாகும் பின்னும்
ஓசைதரு மஞ்செழுத்தை
விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப
னூனமெலா மோட

எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இனி இச்சூத்திரம் மூன்று அதிகரணங்களைக் கொண்டதென்பது முன்னரே கூறப்பட்டது. எவ்வாறெனில்,

"ஊனக்கண்பாச முணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி"

என்பது முதலதிகரணமாம்.

"உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத் தண்ணிழலாம் பதி"

என்பது இரண்டாவ ததிகரணமாம்,

"விதி யெண்ணு மஞ் செழுத்தே"

என்பது மூன்ருவது அதிகரணமாம். அங்ஙனமே மூன்று சூர்ணிகையைக் கொண்டது இச் சூத்திரம்.

—தொடரும்

உதாரணமாக மார்க்கட்டு அறிவிப்பின சுருண ஒன்றைக் கீழ்க் காணலாம்.

கொப்பரா-விலை இறங்கும் நோக்கமாகக் காணப்படுகிறது. புண்ணாக்கு வரத்துக் குறைவு. விலை ஏறும்.

நேற்றைய தினத்தின் நிலவரம் தேங்காய் எண்ணெய் (கடுத்தரம்) கண்டி 1க்கு ரூபா 184. கொப்பரா கண்டி 1க்கு 124.

4. பண்டங்களுக்கு எவ்வாறு மார்க்கட்டு உளளதோஅதேமாதிரிப் பணத்திற்கும அரசாங்கமும் அவைகளை ஆமோதிக்காது இம்பீரியல் வங்கிக்குச் சலுகை காட்டி வந்தது. ஆனது கொண்டு இவ்வகை ஸ்தாபனங்கள் முன்னேறுவதற்குக் காரணமில்லாமல இருந்தது. 2 அன்னிய நாடுகளைப் போல இந்தியாவும் முன்னேற வேண்டுமாகில் செலாவணி விஷயத்திலும் பரிவர்த்தனை விஷயத்திலும் ஸ்திரமான ஒரு தேசிய மார்க்கத்தை அனுசரித்தாலொழியப் பயன்படாது. அவ்வாருன ஸ்திரமார்க்கத்தைப் பழக்கத்திற்கு மார்க்கட்டு உண்டு. பண மார்க்கட்டின் நிலவர விவரங்கள் பத்திரிகைகளில் காணலாம். சாதாரணமாக அவ்வறிவிப்புகள் இம்பீரியல் பாங்கின் நடப்பு வட்டி விதம், அன்னிய நாடுகளின் செலாவப்பத்திரங்களையும் உண்டியல்களையும் மாற்றும் விதா சாரம் போன்ற விவரங்களைக் கொண்டிருக்கும்.

குறிப்பு: இவ்வாசிரியரால் கணக்குப் பதிவு முறை தமிழில் எழுதப்பட்டு "வியாபாரக் கணக்கன்" என்ற வெளியாகி இருக்கிறது.


S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)

பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி யொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20-8-40 மனேஜர்.

குயீன்பிருண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊறுத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.

c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21. 11-8-40—10-8-41.) வி

சி. எம். சாமி
மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது; இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அக்கியாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-41—30-3-41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

புடைவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூத்துணிகள் |
| சேலைகள் | ரசூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கம்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.

எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ், (இந்தியாவில் ஸ்தாபிதமானது): (அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40—

புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கிகரிக்கப் பெற்றவை.

(அங்கிகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரொப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-41—3-3-42



விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 6-00
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டணத்துக்கு ... தமிழ் ரூபா 5-00 இங்கிலீசும் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீசும் தமிழும் 12-00
தொலைப்ப பகுதி 9-00 இங்கிலீசும் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்



கலியிலும் தெய்வத் திருவிளையாடல் காண வேண்டும் பக்தர்கள்

பழநி ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள்.

உங்கள் பக்திக்கேற்பப் பழநி ஆண்டவர் அருள்பாலிப்பார். படிப்பு, உத்தியோக உயர்வு, நல்மணம் யாவும் சித்திக்கும். நாம நக்ஷத்திரத்தால் மாதக் கார்த்திகை தோறும் அர்ச்சனை செய்து 1 வருடம் வரை தவறாது தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூபா 6—75

P. நடராஜபண்டாரம்
மலைக்கோவில் அயன்மிராஸ் பழநி

Q 92 A 25-8-41—24-11-41 (வி)

விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

இரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை, கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7-41—19-7-42



Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday October 2nd 1941.